3.5 தமிழ்நாடு தொலைதொடர்பு கட்டமைப்பு கொள்கை – 2022

(Tamilnadu Telecom Infrastructure Policy – 2022)

(அரசாணை நிலை எண்– 4, தகவல் தொழில் நுட்பத் துறை, நாள்: 25–01–2022.)

தொலை தொடர்பு கட்டமைப்புக்களை மேற்கொள்ளும் நிறுவனங்கள் கிராம ஊராட்சி பகுதிகளில் கிராம ஊராட்சிக்கு சொந்தமான சாலைகள், புறம்போக்கு நிலங்கள் மற்றும் கட்டடங்கள் வழியாக மேற்கொள்ளும் தொலை தொடர்பு கட்டமைப்பு பணிகளான தரையடி கேபிள் அமைத்தல், தரைக்கு மேலே கொண்டு செல்லப்படும் கேபிள் கட்டமைப்புகள் மற்றும் செல்போன் டவர்கள் ஆகியவற்றால் ஊராட்சி சொத்துகளுக்கு ஏற்படும் சேதத்திற்கான உரிய இழப்பீட்டை சம்மந்தப்பட்ட தொலைதொடர்பு கட்டமைப்பு நிறுவனங்களிடமிருந்து கிராம ஊராட்சிகள் பெற இக்கொள்கை வழி வகுக்கிறது.

இதற்கென மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் மாவட்ட அளவிலான தொலைதொடர்பு குழு அமைக்கப்படுவதுடன் இக் கட்டமைப்பு பணிகளுக்கு அனுமதி வழங்க மாவட்ட ஆட்சித்தலைவர் தொடர்பு அலுவலர் (Nodal Officer) ஆக நியமிக்கப்பட்டுள்ளார். தொலைதொடர்பு கட்டமைப்பை மேற்கொள்ளும் நிறுவனம் மாவட்ட ஆட்சித்தலைவருக்கு உரிய ஆவணங்களுடன் இக்கட்டமைப்பால் கிராம ஊராட்சி சொத்திற்கு ஏற்படும் சேதத்தை சரி செய்வதற்கான இழப்பீட்டு கட்டணத்தை செலுத்துவதற்கான உறுதிமொழியுடன் (தேவைப்படின் ஒரு

Scanned with OKEN Scanner

மீட்டருக்கு ரூ.100/- வீதம் (ஒரு கி.மீ. க்கு ரூ.1,00,000/-) வங்கி உத்தரவாத பத்திரத்துடன்) கீழ்கண்ட திரும்ப வழங்க இயலாத ஒருமுறை கட்டணத்துடன் விண்ணப்பிக்க வேண்டும்.

வகை	கட்டணத் தொகை
தரையடி கேபிள் (ஒரு கி.மீ. க்கு)	ரூ.1,000/-
தரைக்கு மேல் கேபிள் / OFC (ஒரு கி.மீ. க்கு)	ரூ.1,000/-
செல்போன் டவர்	ரூ.10,000
வை-பை ஆண்டெனா	ரூ.1,000

மாவட்ட ஆட்சித்தலைவர் அவ்விண்ணப்பத்தின் மீது சம்மந்தப்பட்ட கிராம ஊராட்சியின் கருத்து பெற்று 60 நாட்களுக்குள் அனுமதி வழங்குவார். அனுமதி பெற்று தொலை தொடர்பு கட்டமைப்பை மேற்கொண்டு முடிக்கப்பட்ட 30 நாட்களுக்குள் உரிய இழப்பீட்டுத் தொகையை கிராம ஊராட்சிக்கு சம்மந்தப்பட்ட தொலைதொடர்பு கட்டமைப்பு நிறுவனம் வழங்கும். அல்லது இழப்பினை சரி செய்தும் தரலாம். மேலும் இவ்வாறு அமைக்கப்படும் தொலை தொடர்பு கட்டமைப்புகளால் கிராம ஊராட்சியின் சொத்து பயன்படுத்தமுடியாத நிலை எழும்போதும் உரிய ஆண்டு இழப்பீட்டை பெறலாம். மேலும் மேற்கண்ட விண்ணப்பக் கட்டணத்தொகைகளும் சம்பந்தப்பட்ட கிராம ஊராட்சிக்கு மாவட்ட ஆட்சித்தலைவரால் விடுவிக்கப்பட வேண்டும்.

ஏற்கனவே அனுமதி பெற்ற இத்தகைய தொலைதொடர்பு கட்டமைப்பகளுக்கு மீள அனுமதி பெற தேவையில்லை. இருப்பினும் ஏற்கனவே அனுமதி பெறமால் அமைக்கப்பட்ட தொலைதொடர்பு கட்டமைப்புகளுக்கு 6 மாத காலத்திற்குள் மேற்கண்ட வழிமுறைகளில் உரிய அனுமதியை சம்மந்தப்பட்ட தொலை தொடர்பு கட்டமைப்பு நிறுவனம் பெற வேண்டும்.

கிராம ஊராட்சிக்கு அச்சொத்து தேவைப்படும் நேர்வில் தொலைதொடர்பு கட்டமைப்பை அவ்விடத்திலிருந்து அகற்றவும் வழி வகை செய்யப்பட்டுள்ளது.

மேலும் இப்பொருள் சார்பான அனுமதியினை அளித்திட ஒற்றை சாளர முறை ஏற்படுத்தப்பட்டுள்ளது. அரசாணை எண்:09, தகவல் தொழில் நுட்பத் துறை, நாள்: 28-02-2023-ன்படி தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் (ELCOT) மேலாண் இயக்குநர், இப்பொருள் சார்பான குறை தீர்வு அலுவலராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

மேற்கண்ட தமிழ்நாடு தொலைதொடர்பு கட்டமைப்பு கொள்கை 2022-ன் செயலாக்கத்தால் ஏற்கனவே அரசாணை (நிலை) எண். 172, நாள் 28.03.2000 மூலம் உள்ள வழிதட வாடகை கட்டணம் (Annual Track rent) ஒரு கி.மீ.க்கு ரூ.4,400 வீதம் வசூலித்திடும் நடைமுறை செல்லதக்கதல்ல.

Scanned with OKEN Scanner